விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 8 துல்ஹஜ் 28 இதழ் 178
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-8-1987

## வயிற்றோட்டம்: 13 குழந்தைகள் பலி! 42 குழந்தைகள் யாழ். ஆஸ்பத்திரியில்!

(க. குணலிங்கம்)

யாழ். குடாநாட்டில் குழந்தைகள் மட்டத்தில் வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவுதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்நோயினால் இம்மாதம் மட்டும் பதின்மூன்று குழந்தைகள் மரணமடைந்துள்ளன.

நேற்றுவரை 145 குழந்தைகள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தன. 42 குழந்தைகள் வார்ட்டில் சிகிச்சைபெற்றுவருகின்றன. இந்நோயினைக்கட்டுப்படுத்து முகமாக குழந்தைகள் உணவு விஷயத்தில் கவனமாகவிருக்கும்படியும், சுற்றாடல் சுகா

(5ம் பக்கம் பார்க்க)

## 7 ஜே. வி. உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் கைது!

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியைச் (ஜே வி பி.) சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் அநுராதபுரம் மாவட்டத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

### கொக்கட்டிச்சோலை நூல் பதனிடும் நிறுவனம் சேத எதிரொலி!

# இலங்கை அரசு மீது ஹொங்கொங் நிறுவனம் வழக்கு!

## 40 லட்சம் டாலர் நஷ்டஈடு கோருகிறது!

(கொழும்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச்சோலைப் பகுதியில் இயங்கிவந்த ஹொங்கொங்கைச் சேர்ந்த கடல்உணவு பதனிடும் நிறுவனம் இலங்கை அரசுமீது நஷ்டஈட்டு வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது!**

**இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்த நிறுவனம் விசேட அதிரடிப்படையினரால் சேதமாக்கப்பட்டது தொடர்பாக நாற்பது லட்சம் டாலர் நஷ்டஈடுகோரி இந்தவழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

ஹொங்கொங்கை சேர்ந்த இந்த ஆசிய விவசாய உற்பத்தி நிறுவனம் கொக்கட்டிச்சேலையில் நூல் உற்பத்தி மற்றும் நூல் பதனிடும் பணிகளை மேற்கொண்டிருந்தது.

மட்டக்களப்பில் இயங்கிவந்த விசேட அதிரடிப்படையினர் (எஸ் ரி.எவ்) இந் ஆண்டில் ஆரம்பத்தில் கொக்கட்டிச் சோலையில் பாரிய அளவிலான தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. அச்சமயம் இந்த ஆசிய விவசாய அபிவிருத்தி நிறுவனம் (ஏ ஏ பி.) எஸ். டி. எவ் படைகளால் மோசமாகப் தாக்கப்பட்டது. அத்துடன் அங்கு கடமையிலிருந்த தமிழ் ஊழியர்கள் பலரும் உயிரிழந்த

(5ம் பக்கம் பார்க்க)

## ரயில்கள் மோதின! இருவர் பலி! 36பேர் காயம்!

(கொழும்பு)

கொழும்பிலிருந்து புத்தளம் சென்ற சரக்கு ரயில்வண்டியுடன் நீர்கொழும்பிலிருந்து கொழும்புவந்த பிரதான ரயில்வண்டி மோதியதில் பிரதான ரயிலில் இருந்த பிரயாணிகள் முப்பத்தாறு பேர் காயமடைந்துள்ளனர்.

பிரயாணி ஒருவரும் சரக்கு ரயில் வண்டியின் சாரதியும் மரணமானார்கள்.

இந்த ரயில்விபத்து நேற்று நண்பகல் ஜா-எலைக்கும், கந்தானைக்குமிடையில் சப்பிரஸ் என்னும் இடத்தில் நடைபெற்றது.

இவ்விபத்தில் காயமடைந்த முப்பத்தாறு பிரயாணிகளும் ராகம ஆஸ்பத்திரியிலும் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

(வா)

### 10 வருடங்களாக முதலாவது இடம்

(பருத்தித்துறை)

கல்வி அமைச்சு நடாத்திய 10 வருடங்களுக்கான க. பொ. த. (உயர்) தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் ஆய்வுகளிலிருந்து 10 வருடங்களும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், கொழும்பு விசாகவித்தியாலயமும் சராசரி பெறுபேறுகளில் முதலாம் இடங்களைத் தொடர்ந்து பெற்றுள்ளதாக கல்வி அமைச்சிலிருந்து தெரியவந்துள்ளது.

## வடக்கு, கிழக்கு புனரமைப்பு: வெளிநாட்டு நிறுவனங்கள் ஆர்வம்!

### 10, 000 வீடுகளை செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கும்

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிக்கவுள்ளதாக புனர்வாழ்வுத்துறை அமைச்சர் திரு லயனல் ஜெயதிலக தெரிவித்தார்.

திரு. லயனல் ஜெயதிலக இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்; மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிதி உதவியையும், தளபாடங்களையும் வழங்க செஞ்சிலுவைச்சங்கம் உடன்பட்டுள்ளதுஎன்றும் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்படைந்துள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களை புனரமைக்க ஜப்பானிய நிறுவனங்களும், வெளிநாட்டுத் தொண்டர்

(5ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகளில் 500 வீடுகள் சேதம்!

[யாழ்ப்பாணம்]

கொட்டடிபகுதியில் சுமார் 2500 குடும்பங்கள் ராணுவநடவடிக்கைகளினால் வெளியேறியுள்ளனர் சுமார் 500 வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ் கொட்டடிபுனர்வாழ்வு அபிவிருத்திச்சபை அங்குரார்பணக்கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் திரு. மகேசன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பற்றியும், சேதமடைந்த வீடுகள் பற்றியும் கணக்கெடுப்பதென்றும், உடனடியாக திருட்டுக்களைத்தடுக்க மின் சாரம் பெறவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

## கூட்டணித் தலைவர்கள் நாடு திரும்புவர்

(கொழும்பு)

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் அனைவரும் அடுத்த இருவாரங்களில் சென்னையிலிருந்துநாடுதிரும்பலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை திரு எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் கொழும்பி

[5ம் பக்கத் தொடர்ச்சி]

## தேர் உற்சவத்தில் 20 சங்கிலி, தாலிக்கொடி அபேஸ்!

[அலுவலக நிருபர்]

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவ சன நெருசலில் எழுபத்தைந்து பவுண் நிறையுள்ள இருபது தங்கச்சங்கிலிகளும், ஏழுபவுண் நிறையுடைய தாலிகொடி, ஒன்றரைப்பவுண் மோதிரம், ஐந்து மணிக்கூடுகள், ஒரு சோடி தோடுகள் உட்பட மூவாயிரத்து ஐநூறு ரூபா ரொக்கப்பணம் துருடப்பட்டும் காணமல் போயுமுள்ளதாகவும் யாழ். மாநகரசபை நல்லூர் உற்சவகால அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

தேர் உற்சவ சனநெருசலில் பலர்கீழே விழுந்து மயக்கமடைந்தனர். அப்பொழுதே மேற்படி திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அறியப்படுகின்றது.

குழந்தைகள், பெண்கள் அணிந்திருந்த நகைகளே கூடுதலாக திருடப்பட்டிருக்கின்றன.

இதனிடையே குழந்தையொன்றின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியொன்றை அறுக்க முயன்ற இளம்பெண் ஒருவர் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு மாநகர அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

# ஆயுத ஒப்படைப்பு காலக்கெடு அவசியமில்லை - டிக்ஷிற்

(கொழும்பு)

போராளிகள் தம்மிடம் உள்ள எஞ்சிய ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான காலக்கெடு விதிக்கும் நோக்கம் தமக்கு இல்லை என்று இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே என் டிக்ஷிற் தெரிவித்துள்ளார்.

செய்தி ஸ்தாபனமொன்றுக்கு அவர் அளித்த பேட்டியொன்றிலேயே திரு டிக்ஷிற் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

போராளிகளிடம் எஞ்சியுள்ள ஆயுதங்களை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் இந்திய சமாதானப்படை ஈடுபடுமா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ஆயுதங்கள் தங்குதடையின்றி ஒப்படைக்கப் பட்டுவருவதாகவும் எஞ்சிய ஆயுதங்களும் சமாதான அடிப்படையிலேயே ஒப்படைக்கப்படலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு அமைய இந்தியா தனது கடமையை நிறைவேற்றும் என்று கூறிய

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ்கள், திருமண பிறந்தநாள் வாழ்த்துமடல்களையும்மொத்த மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள "அரஸ் ஜவுளியகம்", 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. [சி-0129]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் RX39, 40, கசற்றேடியோக்கள், National Gas குக்கர், Oven உடன் மின்னிசிறிகள் மிகவும் மலிவு விலையில் உடன்விற்பனைக்குண்டு. சென்பற்றிக் சந்தியருகில், 329, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-0461

நல்லை நகர் நூல்: யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல். கந்தையா குணராசா, எம். ஏ. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-0279]

அநேகரின் வேண்டுகோளின்படி 40 நாள் வளர்த்த பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [சி-0776]

புறெயிலர் கோழி, முட்டைகள், பிறிமா கோழித்தீன் வகைகள், கோழித் தண்ணீர் உபகரணங்கள், தீன் உபகரணங்கள் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். கிளை: சற்குணராஜா பிறதர்ஸ், 660, K. K. S. றோட், யாழ்ப்பாணம். [சி-0575]

நல்ல இன Hyline, Golden comet, Hysex வெள்ளை,கறுப்பு, சிவப்பு பேட்டுக் குஞ்சுகளினதும் சேவல் குஞ்சுகளினதும் புறெயிலர் குஞ்சுகளினதும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. பேட்டுக் குஞ்சு, சேவல் குஞ்சு, புறெயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [சி- 0574]

சுண்டிக்குளியில் நல்ல சுற்றுடலில் 3 அறைகள் உள்ள நவீன மாடி வீடு விற்பனைக்குண்டு. திருநெல்வேலி தண்ணீர், கிணற்றுத்தண்ணீர் மற்றும் சகல வசதிகளுடன் பரப்புகாணியில்கட்டப்பட்டுளது. பரியோவான், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையிலும் அமைந்துள்ளது தொடர்பு கொள்ளுக:- பரணி மருந்துச்சாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சி-0497

பழைய, புதிய வீட்டுத் தளபாடங்கள், கருங்காலி அல்மாரி, தேக்கு அல்மாரி, Gas Oven, Show Case, தேக்கு சாப்பாட்டு மேசை, ஹோல் செற், Baby Cot மெத்தைகள், பற்றிசாரர்ஜர், சிங்கர்மெஷின், RX 40 கசற் றேடியோ, கண்ணாடி மேசைகள், Office மேசை, Cutlery Set, எவர் சில்வர் Filter மற்றும் பல பொருள்கள் உடன் மலிவு விலையில். N. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சென்பற்றிக் சந்தியருகில்] [சி 0532]

### விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு வெறும் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 18, றெம்பிள் வீதி, யாழ்ப்பாணம். சி0555

புதிய நசனல் RX 4925 ரூ இன் வண் Stereo, J V C 100 W Stereo ரூ இன் வண் கசட் Track உடன், புதிய பிலிப்ஸ் ரூ இன் வண் Stereo உடன்விற்பனைக்குண்டு. Hi-Fi Technique, 29, Chetty Street Lane, Nallur, Jaffna. [C-0568]

ஆசிரியரின்றி தமிழ் மூலம் ஆங்கிலம் கற்க Spoken English & Grammar அநேக விளைச்சொற்களைக் கொண்டது. Verbs & Meanings பூபாலசிங்கம் ஸ்ரீலங்கா புத்தகசாலைகள்- யாழ்ப்பாணம். [சி- 0569]

### தேவை

கணக்கியலில் பயிற்சிபெற்ற பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும் கொழும்பு ஸ்ரூடியோ 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். எ-2085

பாவித்த தேக்கு தளபாடங்கள் Vono Spring கட்டில்கள் உடன் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். M. தியாகராஜன், 326. பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி. 0462]

பண்ணையில் வேலை செய்வதற்கு ஒரு ஆள் தேவை. இரண்டுபேர் கொண்ட ஒரு குடும்பம் என்றாலும் காரியமில்லை. நேரில் சந்திக்கவும் பாம் ஹவுஸ், கோட் றோட், மல்லாகம். (சி 0533)

கடையில் வேலைசெய்வதற்கு உதிரிப்பாக விற்பனையில் அனுபவமுள்ளவர்களும் கட்டிட வேலை மேற்பார்வையில் அனுபவமுள்ளவர்களும் உடன் தேவை. தொடர்பு; க. செ. சுவர்ணராஜ் மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி சி-0548

மின்சாரநெசவாலைக்கு அனுபவமிக்க பொருத்துனர் (Technicion) நெசவாளர் தேவை. உடன்நேரில் வரவும். (தங்குமிட வசதி உண்டு) ஸ்ரீ ராஜ்ரெக்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், வட்டுகிழக்கு, சித்தன்கேணி சி-0566

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு எல்லாவித கமராக்களும் திருத்துவதில் நல்ல அனுபவமுள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-0567, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் சி-0567

### வாடகைக்கு

வீடு வாடகைக்குத் தேவை. யாழ். நகரத்திற்கு அண்மையிலும் பிரதான வீதிகளுக்கும் சமீபமாக விரும்பத்தக்கது க. செ. சுவர்ணராஜ், நெல்லியடி. கரவெட்டி. (ஏ 0547)

மந்திகையில் ஆஸ்பத்திரிக்கு 100 யார் தூரத்தில் குடியிருப்பதற்கு மாத்திரம் வீடு வாடகைக்குள்ளது. தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. சி 0557 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 0557)

முனிசிப்பல் பகுதியில் தனிநபர் ஒருவருக்கு சகல வசதியுடன் அறை ஒன்று வாடகைக்குத் தேவை. விளம்பர இல: 0578, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-0578)

### வாடகைக்கு

தாவடி- மானிப்பாய் வீதி, சுதுமலை உப-தபாற் கந்தோர் அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் ப. சுந்தரலிங்கம், 'பசுபதாபதி', சுதுமலை, மானிப்பாய். [சி-0587]

### சேவை

உங்கள் உபயோகித்த வீட்டுத் தளபாடங்களை விற்பனை செய்யவோ அல்லது மாற்றுதல் செய்யவோ உடன் தொடர்பு கொள்க: எம். தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-0463

### வகுப்புக்கள்

26-08-87 ஆரம்பம். Spoken English with Grammar. by S. B Iyar. திங்கள் / புதன் / வெள்ளி நாட்களில் காலை 10—11 மணி, மாலை 3.30—4 30, இரவு 6 — 7 மணி 12, வைமன் வீதி, நல்லூர். [சி-0526]

### கல்வி

4 மாத காலப் பயிற்சி Computer Programming in Basic Language. 30-08-1987 சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம். O/L சித்தியடைந்த இருபாலாரும் சேரலாம். நேரில் தொடர்புகொள்ளவும். உயர் கணக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி 0565)

### மாந்தை மேற்கு ப. நோ. கூ. சங்கம், திருக்கேதீஸ்வரம்.

## வெற்றுச் சாக்கு விற்பனைக்கு கேள்வி கோரல்

மேற்படி சங்கத்தால் கீழ்க்காட்டப்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு முத்திரையிட்ட கேள்விப்பத்திரம்மூலம் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் அனைத்தும் 1987-09-04ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்கிடைக்கக் கூடியதாக "பொது முகாமையாளர், மாந்தை மேற்கு, ப. நோ. கூ. சங்கம், திருக்கேதீஸ்வரம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும்போது விண்ணப்பதாரிகள் மீளப்பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 500/- சங்கத்தில்செலுத்துதல் வேண்டும் தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குக் கேள்வி" எனக்குறிப்பிடல் வேண்டும்.

#### வெற்றுச்சாக்கு விபரம்

| | | |
|---|---|---|
| 1. | மாவுச்சாக்கு (பிறிமா) | — 353 |
| 2. | அரிசிச் சாக்கு (பிறிமா) | — 552 |
| 3. | சீனிச் சாக்கு (2 அந்தர்) | — 14 |
| 4. | கறுப்புக் குறி (அரிசி 2½ புசல்) | — 444 |
| 5. | கறுப்புப் பட்டை | — 1561 |
| 6. | அரிசி (3 புசல்) | — 1303 |
| 7. | அரிசி அவசல் | — 72 |
| 8. | கட்டை வெள்ளைப்பச்சை | — 900 |
| 9. | சீனி கித்தான் | — 1084 |
| 10. | சுமார் | — 967 |
| 11. | சீனி பாக் | — 420 |
| | மொத்தம் | — 7670 |

இவற்றை வேலைநாட்களில் காலை 9-00 மணிமுதல் பி. ப. 4-00 மணிவரை எமது தலைமைச்சங்கத்தில் பார்வையிடலாம்.

N. சிவபாதம்
பொதுமுகாமையாளர்.
எ-2056

## "தற்காலிக பாடசாலை அமைக்கும்— மாற்று நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பேன்"
### — யாழ். கல்விப்பணிப்பாளர்

(உடுப்பிட்டி) அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இப்பாடசாலைக்கு ஏற்பட்ட பாரிய சேதங்களைப் புனரமைப்பதற்கு முன் தற்காலிக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் மாற்று நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பேன். இங்கு பயின்றுவரும் மாணவிகள் தொடர்ந்து கஷ்டங்களுக்கு மத்தியிலும் இப்பாடசாலையிலேயே தமது கல்வியைத் தொடரவேண்டும்".

உடுப்பிட்டி மகளிர் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனாப் மன்சூர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி பா. இராஜேந்திரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாடசாலை நலன்விரும்பிகள், பெற்றோர் பழைய மாணவிகள் ஆசிரிய ஆசிரியைகள் வருகை தந்திருந்தனர்.

மேலும் கல்விப்பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில் "கூடிய விரைவில் இக்கல்லூரிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஈடுசெய்யும் வகையில் நவீன வசதிகளுடன் கூடியகட்டத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன்" என்றார்.

(5ம் பக்கம் பார்க்க)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வைரமுத்து நல்லையா

மலர்வு: 25-05-1929
உதிர்வு: 03-09-1986
திதி: 24-08-1987

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்த எம் அனைவரையும் ஆழ்த்துயரில் ஆழ்த்தி விட்டு மறைந்த எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றிடினும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம் நெஞ்சத்தில் ஒளிவீசிக்கொண்டேயிருக்கிறது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
வண்- வடமேற்கு,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. [சி- 0590]

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

Applications will be received by me for the post of Temporary Instructor in English from suitable candidates upto 18th September, 1987.

Applications should be made on the forms available from this office. Those who wish to obtain the forms and other details by post should send self-addressed stamped envelope of 23x10cm in size.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of such Institutions.

REGISTRAR.
University of Jaffna,
Sri Lanka,
Thirunelvely.
Jaffna. (A2089)

# நூலகவியல்
## இடைநிலைப் பரீட்சை
### 24, 25-10-1987

விண்ணப்ப படிவங்கள்:
Education Officer
## Sri Lanka Library Association,
275/75, Boudhaloka Mawatha.
Colombo-7.

## 1987 இடைநிலை வகுப்புகள்

முதற்பரீட்சையில் 3, 4 பாடங்களிற் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்

வகுப்புக்கள் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகும்.

[சி-0591]

# சோவியத்திலிருந்து வெளியேற நான்கு லட்சம் யூதர்கள் விருப்பம்!

மாஸ்கோ ஆக, 22

சோவியத் யூனியனிலுள்ள சுமார் நான்கு லட்சம் யூத மக்கள் குடியகல்வு கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

தற்போதைய நிலையில் இவர்கள் சோவியத்யூனியனிலிருந்து வெளியேறுவதற்கு சுமார் 58 ஆண்டுகள் எடுக்குமென்று ஐ நா சபையின் இஸ்ரேலிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

சோவியத் தலைவர் கொர்பச்சேவ் கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளபோதிலும் நிறைவேற்று அதிகாரிகள் செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சிவராமன் ஓய்வு பெற்றார்

சென்னை, ஆக 22

'தினமணி' பத்திரிகையின் ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன், ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

'கணக்கன்' எனும் புனை பெயரில் பல வருடங்களாக தொடர்ச்சியாக இவர் தினமணியில் எழுதிய கட்டுரைகள மிகவும் வரவேற்பை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

கொழும்பு ஸ்ருடியோ

ஸ்ரான்லி வீதி

**20-08-87 முதல்**

[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏ-2086

## எம். சி. சி ஆண்டு விழா உலக குழு 3- 169

[லண்டன்]

இங்கிலாந்தில் லண்டன் எம். சி. சி. அணியின் 200 ஆண்டு விழாவை முன்னிட்டு லண்டன் லோட்ஸ் மைதானத்தில் எம் சி சி அணிக்கும் உலகத் தெரிவுக் குழுவுக்குமிடையிலான 5 நாள் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2ம் நாள் ஆட்ட முடிவில் உலத் தெரிவுக் குழு 3 விக்கெட் இழப்பிற்கு 169 ஓட்டங்களைப் பெற்றது

இதில் ஆரம்ப துடுப்பாட்டக்காரர் கவாஸ்கர் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களையும் டெஸ்மண்ட் கெயின்ஸ் 22 ஓட்டங்களையும் வெங்சகார் 23 ஓட்டங்களையும், அலன் போடர் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய எம் சி சி அணி 5 விக்கெட் இழப்பிற்கு 455 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் மைகெற்றிக் 179 ஓட்டங்களையும். கிரஹம்கூச் 117 ஓட்டங்களையும் கோல்டன் கிறினிட்ஜ் 52 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது (சி)


## வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு

## ஆட்டுக் கொட்டில்கள் அமைத்தல்

வல்வெட்டித்துறையின் பல்வேறு இடங்களில் உள்ளூர்க் கட்டிடப் பொருள்களை உபயோகித்து 50ஆட்டுக் கொட்டில்களை அமைப்பதற்குக் கேள்விகள் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுசார்பில் எம்மால் கோரப்படுகின்றன

கேள்விப்பத்திரங்களை ரூப 25/- மட்டும் செலுத்தி எமது அலுவலகத்தில் 29-08-87வரை பெற்றுக்கொள்ளலாம் பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 15-09-87 முற்பகல் 10-00மணிக்கு முன் எமது அலுவலகத்தில் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படவேண்டும்.

கேள்விகோரல் நடைமுறைகளுக்கு அமைவில்லாத எந்தக்கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை எங்களுக்குண்டு.

நேரடியாக அணுகவேண்டிய முகவரி:-

**Project Management Services Ltd,**

33. BROWN ROAD,
NEERAVIADY.
JAFFNA. [எ-2066]



## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன் சீமெந்துத்தொழிற்சாலை, காங்கேசன்துறை.

முருங்கன் களிமண்புலத்தில் களிமண் ஏற்றிவந்து தொழிற்சாலையில் பறிப்பதற்கான

## கேள்விப் பத்திரம்.

காங்கேசன்துறையில் இருக்கும் எமது தொழிற்சாலைக்கு முருங்கன் களிமண்புலத்திலிருந்து லொறிகளில் களிமண் ஏற்றிப்பறிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரையும் சனிக்கிழமையில் பகல் 12-00 மணி வரையும் மீளப்பெறமுடியாத வைப்புப்பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1987-08-26ம் திகதி மாலை 2-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1987-08-27ம் திகதி காலை 10-30 மணிக்கு கேள்விப்பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

இங்ஙனம், உண்மையுள்ள,
இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

[ஏ-2077]



## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை

## கல்வி ஆண்டு 87/88

பின்வரும் தொழிற் பயிற்சி சான்றிதழ் வகுப்புக்களில் வெற்றிடம் உண்டு:

(a) WELDING PRACTICE—ஒட்டுதல் பயிற்சி.
(b) FOUNDRY PRACTICE—உலோக வார்ப்பு பயிற்சி.

G. C. E (O/L) வரை படித்த, 21 வயதுக்குட்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்து சேர்ந்துகொள்ளலாம்.

பயிற்சி நெறிகள் ஒரு வருட (2 பருவங்கள்) காலம், தமிழ் மொழியில் அளிக்கப்படும்.

ஆங்கிலப்பாடமும் வரைபட விளக்கங்களும் போதிக்கப்படும்.

பணிப்பாளர்.

(சி 2078)



## சீ-நோர்

கடற்றொழிலாளரின் நலன் கருதி எமது சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம் பின்வரும் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

எனவே, இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்க எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள்

(1) கல்நாரிழை வள்ளம் கட்டலைக்கு (ஓடருக்கு) செய்து கொடுத்தல்
(2) பழுதடைந்த அல்லது சிதைந்த கல்நார் வள்ளங்கள் செப்பனிட்டுக் கொடுத்தல்
(3) மற்றும் கல்நார் தளபாட, உபகரணங்கள் செய்து கொடுத்தல் ஆகியவை.

நீங்கள் எம்முடன் நேரடியாகவோ, அல்லது கடித மூலமாகவோ பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

உற்பத்தி முகாமையாளர்
சீ நோர்
காரைநகர்.

பிரதிப் பொதுமுகாமையாளர்
சீ-நோர்,
குருநகர்.

[ஏ-2031]



## சர்வோதய தீவிர உதவிகள்

வன்செயல்கள் காரணமாக குடியிருப்பு வீடுகளை இழந்தவர்களுக்கும், பதட்ட நிலையால் இடம்பெயர்ந்து வசத்ததினல் தமது குடியருப்பு வீடுகள் கறையான் முதலியவற்றல் பாதிக்கப்பட்டவர்களுக்கும். மிகஅவசரமாக தங்கள் வீடு, வாசல்களை வேய்ந்துகொள்ள (வசதியற்றவர்களுக்கு) கிளிநொச்சி மாவட்டப் பகுதிக்குள் தென்னம் கிடுகுகள் இலவசமாகக் கொடுக்கப்படும். ஆங்காங்குள்ள சர்வோதய பாலர் பாடசாலை ஆசிரியைகள் மூலம் உடனே நமக்கு விண்ணப்பியுங்கள்.

ஃ ஃ ஃ

## சர்வோதய தீவிர தொண்டர்கள்

அடுத்த 2, 3 வருடங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கிளிநொச்சி, புலோப்பளை பிரதேசங்களில் வன்செயல் காரணமாக ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை ஈடுசெய்ய நிவாரண - புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டு செயல்படுத்த சர்வோதய சகோதர - சகோதரிகள் தேவை. நம்பிக்கை நாணயமும், திடகாத்திரமும், போதிய கல்வியறிவும், உறுப்பான எழுத்து வன்மையும் உள்ளவர்கள் அத்தாட்சிகளுடன் அவசரமாக விண்ணப்பிக்கலாம்.

தமிழ் பாரம்பரிய - பழக்கவழக்க - ஒழுக்க நெறிகளுக்கமைவோர் மட்டும் தாவர உணவுடன் விடுதியில் சுயமுயற்சியுடன் தங்கவேண்டும். குடும்பப் பொறுப்புக்கள் குறைந்தவர்கள் நல்லது. சகோதரிகள் விடுதியில் கால்முட்ட உடுப்பும், கடமையில் சாரியும் அணியவேண்டும். தலையைச் சீவி கொண்டை கட்டி அல்லது பின்னித்தொங்க விடவேண்டும்.

ஏற்கனவே விடுதியில் 15 சர்வோதய சகோதரிகள் உள்ளனர். அமைப்பு முறைப்படி (அலவன்ஸ்) கைச்செலவு வழங்கப்படும். மேலும் 10 சகோதரர்களும், 15 சகோதரிகளும் தேவை.

ஃ ஃ ஃ

மதுப்பழக்கம், புகைத்தல் முதலிய பழக்கமற்றவர்களாக வாகனம் செலுத்துபவர் 3 பேரும், தட்டச்சு அனுபவமுள்ளவரும் தேவை.

சி. க. வேலாயுதபிள்ளை,
சர்வோதய மாவட்ட இணைப்பாளர்,
உருத்திரபுரம்

[ஏ-2097]

### மணிவாக்கு

"உனக்கு இன்பம் வேண்டுமா அல்லது அதிகாரம் வேண்டுமா? இரண்டும் தரமுடியாது, ஒன்றுதான் தரலாம், இரண்டுமல்ல" என்றார் இறைவன்.

— எமர்சன்

## நமது நோக்கு

# இது வேறொன்றுமல்ல; அகில உலகின் கண்ணூறு!

இற்றையின் மிகப் பெரிய அற்புதம் அமெரிக்காவின் நயாகரா நீர்வீழ்ச்சி என்பது எல்லோரும் அறிந்ததே!

அதற்கு முன்னால் நின்ற போது தங்கள் மனத்தில் என்ன பட்டது? என்று நண்பன் ஒருவன் ஆபிரகாம் லிங்கனைக் கேட்டானாம்.

"இவ்வளவு தண்ணீரும் எங்கிருந்து வந்ததென்ற எண்ணத்திலே பிரமித்துப் போனேன்" என்றார் லிங்கன்.

இலங்கைப் பாராளுமன்றக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை மிகத் தெளிவாகச் சபைக்கு எடுத்து விளக்கிய பிரதமர்பிரேமதாசா அன்று லிகிதர் சேனாதீர குறுக்கிடா விட்டால், தானும் ஜனாதிபதியும் கொல்லப்பட்டிருப்பார்கள் என்பதை தக்க ஆதாரத்துடன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சம்பவம் நடந்த தினத்தன்று வீட்டில் ஆறுதலாக அச்சம்பவத்தை மீட்டல் செய்தபோது, ரூபவாஹினியில் பிரதமர் கண்டது "புலிகள் ஆயுத ஒப்படைப்பு". அது அவருக்கு அதிர்ச்சியளித்ததாம். அது கண்ணூறல்ல, ஆபிரகாம் லிங்கனின் கூற்றைப் போன்றது.

இலங்கையில் காணமுடியாத ஆயுதங்கள் இவ்வளவும் எங்கிருந்து வந்தன? என்றதே அவருடைய அதிர்ச்சி!

இதன் 'வில்லன்' வேறு யார்? தான் ஏற்கனவே சொன்ன பேர்வழிதானே! என்பதைப் பாராளுமன்றத்தில் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த 'கொழும்பு' ஒப்பந்தம் இன்றைய ஜனாதிபதியின் (அன்று அவர் அமைச்சர்) நிர்வாக ஆற்றலை வெளிப்படுத்திய முந்திய 'கொழும்புத் திட்டம்' (Colombo Plan) போன்று செவ்வனே செயற்படவேண்டும்; செயற்படும் என்று கருதும் நாட்டின் நல்லெண்ணம் படைத்த தலைவர்களும் நாடுகளும் பல

ஜனாதிபதி ஜே.ஆர். கிழித்தெறிய உதவிய பீ.சி. ஒப்பந்தம் போன்றதல்ல இது. பிரதமர் டட்லி உருவாக்க முயன்ற கருத்தரியாத டட்லி - செல்வா ஒப்பந்தம் அல்ல இது. 'எ பி.சி' யோ அல்லது அநுபந்தம் 'சி'யோ போன்ற காற்றூடிகள் அல்ல இது; இரு நாடுகளுக்கிடையான ஒப்பந்தம், சர்வதேசச் சட்டத்துக்கமைந்த ஒப்பந்தமே.

இத்தகைய ஒப்பந்தம் கோழியைக் கேட்டு ஆணம் காய்ச்சுவது போன்றதன்று. இதற்கு முட்டுக்கட்டைகள் ஏராளம் ஏற்படலாம். பிரதமர் பிரேமதாசா அதனைப் பாராளுமன்றத்தில் சொல்லாமற் சொல்லியிருக்கிறார்; அது ஆகஸ்ட் 20ம் தேதி நடைபெற்றது. கடுங்காற்று வீசிய காலம் அது. சுவாத்தியம் அமைதியானதும், உலகின் வீடுகளுக்குத் தலைமைதாங்கும் கப்டன் தன்வீட்டுக்கு ஒரு வழி காட்டியாவது அற்புதமா?

ஐந்து ஆடு அடித்தும் ஆணத்துக்கு காணாதே என்று எங்கள் வாசகர் ஒருவர் அழுத நினைவு வருகின்றது. "ஆறாயிரம் பேரைப் பலிகொடுத்து கண்ட மிச்சம் இந்த ஒப்பந்தம்தானா? இதற்காகவா இந்தியப் பிரதமரை வருக என்று வரவேற்றீர்கள்" என்பது அவரின் ஆழமான பிரலாபம்.

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா போன்ற மூளைசாலிகள் எங்கள் மத்தியில் அநேகர் இருக்கமாட்டார். ஆறும் திருத்தத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வந்த அனுரா, புலிகளுக்கு நல்ல பாடம் படிப்பித்த பாதுகாப்பு அமைச்சர் குணமடைய வேண்டுமென்று விஷேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்

பாராளுமன்றத்தில் அனுரா வழங்கிய வியாக்கியானம்: ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்க்கும் புலிகள் தலைவன் பிரபாகரனால் இச் சதித்திட்டமிடப்பட்டிருக்கலாம்- அதற்குரிய ஆராய்ச்சியை விளக்கியிருக்கிறார்.

நிச்சயம் தாயாருடன் அவர் இதுபற்றி கலந்து ஆலோசிக்கவில்லை. அவ்வாறு கலந்திருந்தால் அம்மையார் "மகனே புலிகளின் திட்டம் குறிதப்புவதில்லையென்பதை அறியாயோ?" என்று மறுத்திருப்பார்.

சடுதியான போர் நிறுத்தம் கண்ட இந்த ஒப்பந்தம், லெபனானைப்போல, ஒன்று அல்லது பல போர்களுக்குஇடமளிக்கலாகாது. இதுவே எமது மக்களின் தினசரிப் பிரார்த்தனை, ஆயுதங்களை கையளித்த இளைஞர் தம் வீரத்தை கையளிக்கவில்லை.

போர்நிறுத்தம், போராளிகளின் நோக்கங்களைப் பூர்த்திசெய்ய எவ்வளவு இடமளிக்கிறதோ அவற்றை நிறைவேற்ற மக்கள் பூரண ஆதரவு அளிப்பர்; ஆனல் போரில் வீரம் வேறு பட்டது சமாதானத்தில் வீரம், புலிகள் பசுக்களாக மாறிப் பால் சொரிவதில் தங்கியிருக்கிறது.

இதற்கொரு சந்தர்ப்பம் சத்தப்படாமல் ஏற்பட்டிருப்பது உலகின் கண்ணூறுக்கு இலக்கானது. பாராளுமன்ற பயங்கர சம்பவம் அதனைக் குறிக்கிறது. தலைக்கு ஏற்பட்ட அபாயம் தலைப்பாகையுடன் போய் விட்டது.

## ரரஜீவ் மதுரை வருகிறார்

மதுரை, ஆக 22

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இம்மாதம் 31ம் திகதி வரட்சி நிலைமையையும் நிவாரணப் பணிகளையும் நேரில் பார்வையிடுவதற்காக மதுரை வருகிறார்.

# நல்லைக்கந்தனின் தேர் உற்சவம்: பக்தர்கள் அலைமோதினர்

(அலுவலக நிருபர் என். கே துரைசிங்கம்)

ஹெலி, பொம்மர், ஷெல் தாக்குதலின் பின்னணியில் கடந்த நான்கு வருடங்களாக பக்தர்கள் வெள்ளத்தைக் காணாத நல்லூர்க் கந்தன் நேறறைய தேர்த் திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான மக்களை காண தன்னகத்தே ஈர்த்து கோலாகலமாகக் காட்சி கொடுத்தான்.

கோயிலின் எந்தப்பகுதியைப் பார்த்தாலும் மக்கள் வெள்ளத்தையே காண முடிந்தது.

1983-ம் ஆண்டிற்கு பின்னர் நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில், யாழ் நகரத்தில் வசிக்கும் மக்களே பெரும்பாலும் கலந்து கொள்வார்கள். ஹெலி சுடுமா? பொம்மர் குண்டு போடுமா? என்ற அச்சத்தின் மத்தியில்தான் நல்லூர்க் கந்தனை தரிசிப்பார்கள் ஆனல் இன்று அந் நிலைமை மாறி விட்டது.

யாழ். குடா நாட்டின் பல பாகங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களான முல்லைத் தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வந்திருந்தார்கள்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் இக் கோயில் மக்கள் கூட்டத்தால் பொலிவுபெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது

தினமும் இடம்பெறும் சுவாமி வீதி உலா மாலை ஆறு மணியுடன் நிறைவுற்றாலும், இரவு பத்து மணி வரையும் இவ் ஆலய சுற்றாடல் மக்கள் கூட்டத்தால் கலகலப்பாகவே காணப்பட்டது.

கொடியேற்ற தினத்திலிருந்து நான்கு வீதிகளிலும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரும் சாரணர் இயக்கத்தினரும் இந்து இளைஞர் மன்றத் தொண்டர்களும் நின்று வீதி ஒழுங்குகளைக் கவனித்ததோடு திருட்டு முதலியன நடைபெறுதவாறு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுப் பணிபுரிந்தார்கள்.

தேர்த்திருவிழாவின்போது குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பஜனைக் கோஷ்டிகளும், காவடிகளும் நல்லைக் கந்தனை நாடி நூற்றுககணக்கில் வந்ததனை அவதானிக்க முடிந்தது.

அங்கப் பிரதிஷ்டைகளும், பெண்கள் அடி அழிப்பு, கற்பூரச்சட்டி தாங்கி வலம் வருதல் உட்பட பல விதமான நேர்த்திக் கடன்களும் நிறைவேற்றப்பட்டன.

நேற்றுக்காலை ஆறு மணிக்கு முன்னரே நல்லூர் ஆலய நான்குபக்க வீதிகளும் மக்கள் வெள்ளத்தினல் நிரம்பி வழிந்தன.

குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் நேற்றைய தேர் உற்சவத்தையொட்டி விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததினல் மக்கள் தமது பயணத்தை இலகுவாக தொடரக்கூடியதாகவிருந்தது. கால்நடையாகவும் பலர் வந்துகொண்டிருந்தார்கள்.

தேர் உற்சவத்தையொட்டி பல நூற்றுக்கணக்கான தேங்காய்கள் நேற்று உடைக்கப்பட்டன.

உடைக்கப்பட்ட தேங்காய்கள் உடனுக்குடன் அதற்கான பணியாளர்களால் கோயிலின் நந்தவனப்பகுதிக்கு எடுத்துச் செல்லப் பட்டவண்ணமிருந்தன.

பக்தர்களின் நன்மை கருதி யாழ் மாநகரசபையினல் மலசலகூட, தண்ணீர் வசதிகளும் வீதிகுளிர்மையாக்கல் பணியும் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

கடலைவிற்கும் கொட்டில்கள் மளிகைக் கடைகள் உட்பட பல வியாபார நிறுவனங்களின் நிலையங்கள் நல்லூரின் நான்கு வீதிகளிலும் அமைக்கப்பட்டிருந்ததுடன் விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கமான 'சோட்' புத்தகக் கண்காட்சியொன்றையும் அமைத்திருந்தது.

ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன உட்பட பல தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு நல்லூர்த் தேர் உற்சவத்தைப்

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### யாழ்ப்பாண தபால் பெட்டிகள்

யாழ்ப்பாணத்தில் அதிகமான தபால் பெட்டிகளின் கதவுகளின்பூட்டுகள் இயங்குவதில்லை. கடிதங்களை திரட்டுபவர்கள், நாசூக்காக கதவுகளை மூடிவிட்டு செல்கின்றனர். இதை அறியாத அப்பாவி மக்கள், தொடர்ந்தும் இப்பெட்டிகளை பாவிக்கிறார்கள். ஆள் அரவமில்லா நேரங்களில், யார் யார் இக்கடிதங்களுக்கு என்ன செய்கிறார்கள் என்பது ஈசனுக்குத்தான் தெரியும்! இவற்றில் பல, பெறுமதி வாய்ந்த முத்திரைகள் ஒட்டப்பட்ட வெளிநாட்டுக் கடிதங்களே! கடிதங்களை திரட்டும் நேரங்களும் ஒருபெட்டியிலுமில்லை

வாசகர்கள் விரும்பினல் யாழ். பஜார் தபால் கந்தோருக்கு முன்பாகவும் திருநெல்வேலி தபால் கந்தோருக்கு முன்பாகவும் கந்தர்மடம் சந்தியிலுள்ள தபால் பெட்டிகளையும் சோதித்து பார்க்கலாம்!

பூட்டுக்களை திருத்த பணமில்லாவிடில், பாதிக்கப்பட்ட பெட்டிகளின் வாய்களையாவது மூடி சீல் வைத்துவிடலாமே. மக்கள் சேவைக்காக இருப்பவர்களுக்கு ஏன் இந்த மனப்பான்மை?

ந. தேவராஜன்,
அரசடிவீதி,
யாழ்ப்பாணம்,

★

### வரியிறுப்பாளர் சங்கம் அவசியம்

பாதிப்படைந்த எமது பகுதி வரியிறுப்பாளர்களின் குறைகள் தென்பகுதியில் உள்ளவர்களின் குறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதும், விசேடமானதும் ஆகும். எனவே மக்கள் தமது பாதிப்புக்களைச் சீர்வரிசைப்படுத்தி அரசாங்கத்தின் கவனத்திற்குக் காலந் தாழ்த்தாது கொண்டு வந்தாலன்றித் தகுந்த, உரிய நிவாரணம் இவர்களுக்குக் கிடைக்குமா? என்பது சந்தேகமே.

நிவாரணங்களை அரசாங்கத்திடம் பெற வேண்டிய மோசமான நிலையில் இப்பிராந்திய வரியிறுப்பாளர்கள் உள்ளனர். வருமானவரி, வியாபார மொத்த விற்பனவுவரி நிவாரணத்தோடு, இறக்குமதிவரி, சலுகையுடன் கூடிய நிதியுதவி போன்ற நிவாரணங்களும் கிடைத்தால்தான் எமதுபிராந்திய அபிவிருத்தி முன்னேறும் வாய்ப்பு உண்டாகும்.

இந்த நிவாரண வேண்டுதல்கள் தனிநபர் வேண்டுதலாக இராது, ஒன்றிணைந்த ஓர் அமைப்பின் வேண்டுகோளாக அமைந்தால் நிச்சயம் சாதகமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு. எனவே ஓர் வரியிறுப்பாளர் சங்கம் எமது பகுதிக்கென அமைக்கப்பட வேண்டியது அவசியம். இவ்விடயத்தில் ஈடுபாடுடையவர்கள் இதன் ஆக்கத்துக்கு ஊக்கமளித்து உதவுவர் என்பது திண்ணம்.

ந. கருணை ஆனந்தன்.

## நல்லை வாழ் வேலனே

அஞ்சுகா அண்ணலின் அரியபே ருதவியை
அன்றுநீ வேண்டி நின்றே
அழகுமிளிர் மதிவதன மங்கையாம் வள்ளியை
அவாவுற் றணைத்த அரசே!
வஞ்சமில் நல்லையில் வள்ளிதெய் வானையொடு
வாழ்வுகொள் கந்தவேளே
வனிதையர்க ளோடின்று தீர்த்தத்தை யாடியே
வந்தெமக் கருளு வாயே!

— வெண்பாமணி முருககூரியன்

★ ★ ★

## இணையில்லாத் துணைவன் நீ என்பதனை அறிந்தேன்!!

ராகம்: தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

பற்றிட ஏதுமின்றிப் பற்றினேன் உன்பாதம்!
பெற்றிட அருள்வாய் ஐயா- முருகையா!!
[பற்றி...]

அனுபல்லவி

துணையெலாம் துணையென நம்பியே அலைந்தேன்!
இணையிலாத் துணைவன்நீ என்பதனை அறிந்தேன்!!!
[பற்றி...]

சரணம்

பெற்றதோர் பேர்புகழ் செல்வமும் துணையில்லை!
உற்றமும் பெற்றவர் சுற்றமும் நிலையில்லை!!
கற்றபே ரறிஞரின் சுற்றமும் நிலையில்லை!
நற்றவா! நல்லைவாழ் வேலவா!! எங்கணும்
[பற்றி...]

"முருகு"

★ இன்று நல்லைக்கந்தன் தீர்த்தத் திருவிழா

# ‘பிரபா’ தலைமையில் தமிழ் மக்கள் திரளவேண்டும்”

## — கவிஞர் காசி. ஆனந்தன்

[அலுவலக நிருபர்]

“தமிழீழ விடுதலைப் போரில் விடுதலை உணர்வோடு நாம் ஈடுபட்டோம் என்பது உண்மையானல், நம்முடைய நோக்கம் கடந்த காலங்களில் தூய்மையாக இருந்தது என்பது உண்மையானல் ஏனைய இயக்கங்கள் தங்கள் மனதிலுள்ள மனக்கசப்புகளை மறந்து விடுதலைப் புலிகள் என்ற பேரியக்கத்தோடு சங்கமமாகவேண்டும் தமிழீழ மக்களாகியநாம் ஐக்கியப்படுவதில் எமக்குஎந்தவித நட்டமோ பாதிப்போ இருக்க நியாயமில்லை’’.

கவிஞர் காசி ஆனந்தன் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

(இவர் தெரிவித்த கருத்தின் ஒரு பகுதி நேற்றைய ‘ஈழநாடு’வில் வெளிவந்தது மிகுதி இங்கு தரப்படுகிறது)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில் பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது. அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபனும் உடனிருந்தார்.

கவிஞர் காசி ஆனந்தன் மேலும் தெரிவித்ததாவது:-

“83-ல் ராணுவத்தினரால் தேடப்பட்டவர்களுள் நானும் ஒருவன். இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை கொலைச் சம்பவம் தொடர்பாக எனது தலைக்கு 10 ஆயிரம் ரூபா அரசால் பேசப்பட்டது. இதனல் தமிழ் நாட்டுக்கு மன்னூடாக மறைந்து படகில் சென்றேன். விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பித்த காலத்தில் தலைவர் பிரபாகரனுடன் எனக்குத் தொடர்பிருந்தது.

“தமிழ்நாடு சென்றபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட்பீரோ உறுப்பினராக இருந்தேன் அங்கு நடைபெற்ற அரசியற் குழுக் கூட்டங்களிலெல்லாம் தமிழீழவிடுதலை என்ற உணர்விலிருந்து விலகி, எப்படியோ ஏதோ ஒரு சிறு அளவிலான மாநில அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில் அவர்கள் ஆர்வம் காட்டினர்கள் அப்பொழுதெல்லாம் அதனை நான் எதிர்த்து வாதாடினேன். வடக்கு-கிழக்கைப் பிரித்துக் கொடுத்தாற்கூட ஏற்றுக் கொள்ளுமளவிற்கு அவர்களின் நிலைப்பாடு இருந்தது இதனைத் தொடர்ந்து 84-ம் ஆண்டுப் பிற்பகுதியில் அரசியற் குழுவிலிருந்து வெளியேறினேன் ஆனல் அவர்கள் என்னை வெளியேற்றவில்லை. கடந்த இரு வருடகாலமாக விடுதலைப் புலிகளின் பிரசாரப் பிரிவில் முக்கிய உறுப்பினராக இருக்கின்றேன்.

“பிரபாகரன் உருவாக்கிய மாபெரும் இயக்கத்தைத் தமிழீழ மக்கள் அனைவரும் இணைந்து, பேதங்களை மறந்து ஒரே தலைமை - பிரபா தலைமையை ஏற்கவேண்டும். இந்த நிலையை உருவாக்க கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம்கூடத் தமது பங்களிப்பைச் செய்யமுடியும் என்பது எனது கருத்து. தமிழர் விடுதலைப் போராட்டம் எவ்வளவு முக்கியமானதென்று உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை அவர் கலைக்க வேண்டும். அப்படி அவர் செய்தால் இந்த மண்ணில் தங்கள் இன்னுயிரைப் பறிகொடுத்த அத்தனை தியாகிகளுக்கும் மரியாதையாகக்கூட அமையும் எனக் கருதுகின்றேன் அந்த மரியாதைகூட அவருக்குச் சேரும்.

“1977-ல் பிரபாகரன் ஒரு கைத் துப்பாக்கியோடு மட்டுப் இருந்த காலத்தில், ஆயுதப் போராட்டத்திற்குப் பிரபா தான் சரியான தலைவரென்று ஒப்புக்கொண்ட திரு அமிர்தலிங்கம், 10 ஆண்டு காலத்துக்குள் வலிமைமிக்க இயந்திரத் துப்பாக்கிகளோடு தியாக மறவர்களைக் கொண்ட ஒரு பேரியக்கமாய் - அதே பிரபாகரன் நிமிர்ந்து நிற்கின்ற காலத்தில் அவர் தலைமையில் தமிழீழ மக்கள் அனைவரும் நிற்கவேண்டும் என்று அவர் கூறத் தயங்க வேண்டியதில்லை. [மா]


## கடைசி நேர வரிவிளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்துக்கு நல்ல அனுபவமுடைய ரிங்கரும், டீசல் மெக்கானிக்கும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். மேற்கூறிய தொழில்களில் நல்ல அனுபவமுடையோர் 601, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உடனே தொடர்புகொள்ளவும். (சி-0521)


## தொழில் நுட்பப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

தேவரையாளி இந்துக் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 87ம் ஆண்டு தொழில் நுட்பப் பயிற்சியை பெற விண்ணப்பித்த மாணவ, மாணவிகள் எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமை காலை பாடசாலைக்கு சமூகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

## மூன்றும்தவணை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் மூன்றும் தவணை வகுப்புக்கள் நாளை 25ம் திகதி ஆரம்பமாகும். அன்று தொடக்கம் இக்கல்லூரி இருநேரப் பாடசாலை வேளைகளாக நடைபெறும் என்று கல்லூரி அதிபர் திரு வீ. தங்கராசா தெரிவித்துள்ளார்.

கடந்த தவணையின் போது இழந்த பாடசாலை நாட்களை ஈடுசெய்யவே நேரகாலத்துடன் வகுப்புக்கள் ஆரம்பமாவதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## நல்லைக்கந்தன்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

பதிவு செய்துகொண்டிருந்தார்கள்.

நாட்டின் அமைதியும், சமாதானமும் வேண்டி சுமார் மூன்று மணிநேரம் கந்தனின் தேர்உலா முடிந்தபின்னர் ஆறுமுகப்பெருமானுக்கு மகா அபிஷேகம் நடத்தப்பட்டது

நல்லூர் கந்னின் கொடியேறிய நாளிலிருந்து இராணுவ உடைகளுடன் ஆலயத்திற்கு வந்து உலாவிய இந்திய அமைதிப் படையினர் நேற்று வேட்டி அணிந்து வந்து கந்தனைத் தரிசனம் செய்ததுடன் புகைப்படங்களும் எடுத்ததையும் கவனிக்க முடிந்தது.

## தற்காலிக

(2ம் பக்கத் தொடர்ச்சி)

உடுப்பிட்டி கிராமசபைமுன்னுள் தலைவரும், சட்டத்தரணியுமான ஆர். ஆர். தர்மரத்தினம் தமது உரையில் வடமாகாணத்தில் சிறந்த பாடசாலைகளில் ஒன்ருன இப்பாடசாலை துரதிர்ஷ்டவசமாக இன்று பாரிய சேதத்துக்குட்பட்டநிலையில் உள்ளது. இதனைக் கட்டியெழுப்ப கல்வித்திணைக்களத்தின் உதவியை இப்பகுதி மக்கள் வேண்டிக்கொள்கின்றனர் எனக் கூறினர். அத்துடன்இப்பாடசாலையில் இருந்து பாதுகாப்பிற்காகவோ வேறு காரணங்களுக்காகவோ வெளியே எடுத்துச்செல்லப்பட்ட தளபாடங்களைத் திருப்பிப் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை விநயமாகக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி பெரியதம்பி உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை, கல்லூரியின் முன்னுள் அதிபர் செல்விமான், பாடசாலை அபிவிருத்தி சபைச் செயலாளர் திரு. வே. சிறிஸ்கந்தராசா ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

## காங்கேசன்துறை பாடசாலைகள் புதன் ஆரம்பம்

காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகள் மூன்றும் தவணைக்காக இம்மாதம் 26ம் திகதிபுதன்கிழமை ஆரம்பிக்குமாறு கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம். மன்சூர் பாடசாலை அதிபர்களைப் பணித்துள்ளார்.

க. பொ. த. (உயர் தாம்) பரீட்சை நடைபெறும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் இந்துக் கல்லூரி ஆகிய இரண்டும் இம்மாதம் 31ம் திகதி ஆரம்பமாகுமெனவும் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம், கட்டுவன்புலப் மகாவித்தியாலயம் ஆகிய இரண்டும் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகுமெனவும் கல்விப்பணிப்பாளர் மேலும்அறிவித்துள்ளார். (வா)

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
கிழமை: திங்கள்
திகதி: 8 [24-8-87]
நக்ஷத்திரம்: மகம்
திதி: அமாவாசை

மேடம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும், பிதாவழி ஆதரவும் கிடைக்கும், புதிய தொழில் விருத்தி பெறும்.

இடபம்: உண்மைவழிநின்று உயர்வடைவீர்கள், தொழில் லாபம் கிட்டும், நிலை மாற்றமும் ஏற்படலாம்.

மிதுனம்: பொதுத்துறையில் நாட்டம், பொன் பொருள் வரவு, பெரியோர் ஆதரவும் உண்டாம்.

கடகம்: நிதியில் முடக்கம் தென்படும், வீண்பழிக்குமாளாகுவீர்கள், தொழில்நிலையில் மந்தநிலை ஏற்படும்.

சிங்கம்: உடல்நிலை குன்றும், பிரயாணத்தைப் பின்போடவும், அவப்பெயரும் ஏற்படும், அவதானம்.

கன்னி: உறவுகள்பலப்படும், உத்தியோகச் சிறப்புமுண்டு, உயர்கல்வி நாட்டமுண்டாம்.

துலாம்: வழக்கு விவகாரம் ஏற்படும், வீண்செலவும் அதிகரிக்கும், பொறுமையுடன் செயல்படவும்.

விருச்சிகம்: விவசாயிகள் வியப்படைவர், விருந்தினர் வருகையுண்டு, அறவழிகளை மனம் நாடும்.

தனுசு: புத்திரர் பெருமையுண்டு, புண்ணிய விருப்பமுண்டு, பொறியியலாளர்களுக்குப் பொன்னுனதினம்.

மகரம்: தொழில் மந்தநிலை. தனதானிய நஸ்டமுண்டு குடும்பத்திலும் பிளவுகள் தோன்றும், உடல் நலிவுப் தோன்றும்.

கும்பம்: களஸ்திரப்பெருமையுண்டு, கடமையும் சிறக்கும் பிறர் ஆதரவுமுண்டாம்

மீனம்: சூழ்ச்சி வலை விரிக்கும். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும், எவ்விடயத்திலும் நிதானம் அவசியம்.

வே. இரவீந்திரன்
திருமலை


எமது நேற்றைய

**புதிய வெளியீடுகள்**

(1) ஜெய்கணேஸ், ஜெய்சித்திரா, கவுண்டமணி
**‘காமன் பண்டிகை’**

(2) சோ மற்றும் பலர் நடித்த
**‘காணி நிலம்’**

**(3) ‘PREDATOR’** (War Film)

**குணம் வீடியோ சென்ரர்,**
**42, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 23665 (ஏ-2098)


## ஆயுத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. டிக்ஸிற் இற்றைவரை போராளிகளால் 70 சதவீதமான ஆயுதங்கள் ஒப்படைக்கப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவைகளுல் 80 - 85 வீதமானவை கனரக ஆயுதங்கள் என்றும் கூறினர். [ரா]

## வயிற்ருேட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாரம் முறையாகப் பேணப்படவேண்டுமெனவும் சுகாதாரத் திணைக்களம் பொது மக்களுக்கு அவசர ஆலோசனை வழங்கியுள்ளது. (கு)

## இலங்கைஅரசு

(1 ம் பக்கம் பார்க்க)

னர் எனவும் அறிவிக்கப்பட்டது.

உலக வங்கியின் ஒரு கிளை அமைப்பான, சர்வதேச முதலீட்டுப் பிரச்னைகளைத் தீர்க்கும் ஐ ஸி எஸ் ஐ டி. நிறுவனத்தின் கோட்பாடுகளுக்கு அமையவே இந்த நஷ்ட ஈட்டு வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது

கொக்கட்டிச்சோலையில் இயங்கியஎ. எ. பி. நிறுவம் இலங்கையின் ரொன்டிப் கடல் உணவு பதனிடும் நிறுவனத்துடன் கூட்டாக இயங்கி வந்தது. அமெரிக்க, பிரிட்டிஷ் மே ஜேர்மன் முதலீட்டாளர்கள் எ. எ. பி கம்பனியில் முதலீடுசெய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

சுன்னுகம மயிலணி கல்விக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று மாலை மயிலணியில் நடைபெறுகிறது.

இன்று ஆரம்பமாபகும் இப்போட்டி இம்மாதம் 28-ம் திகதிவரை நடைபெறும்.

இப்போட்டியில் முப்பத்திமூன்று விளையாட்டுக் கழகங்கள் கொள்கின்றன. [ஒ]

## ராணுவநடவடிக்கையால் வை. எம். சி. ஏ. நிவாரண உதவி!

(யாழ்ப்பாணம்)

1987ம் ஆண்டு இடம்பெற்ற இராணுவநடவடிக்கைகளினுல் கணவனை இழந்த விதைவைகளுக்கும், குடும்பத் தலைவன் கை, கால்களை இழந்து அங்கவீனமுற்றதால் தொழில் செய்து வாழ்க்கை நடத்தமுடியாமலுள்ள குடும்பங்களுக்கும் யாழ் வை. எம் சீ ஏ நிறுவனம் நிவாரண உதவி வழங்கவுள்ளது.

தேசிய வை. எம். சீ ஏ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த நிவாரண உதவியைப் பெறத் தகுதியுடையவர்கள் தாம் நிரந்தரமாகவசிக்கும்பகுதிகளிலுள்ள வை எம். சீ. ஏ. நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வடமாகாணத்தின் பருத்தித்துறை, பண்டத்தரிப்பு, வவனியா, உடுவில், மானிப்பாய், நவாலி, யாழ்ப்பாணம், பரந்தன் ஆகிய பகுதிகளில் வை. எம்.சீ. ஏ ஸ்தாபனங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றுடன் தொடர்புகொண்டு நிவாரண உதவிகளை பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். வை. எம் சீ. ஏ. நிறுவனச் செயலாளர் எம். தம்பித்துரை தெரிவித்துள்ளார். (ஒ)

## 7 ஜே. வி. பி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தம்புதேகம பொலிஸ் பகுதியில் நேற்று கைதுசெய்யப்பட்ட இவர்களிடமிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள் சீருடைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஜுன்மாதம் கொத்தலாவலை பாதுகாப்புபயிற்சி நிலையத்தில் கொள்ளையடிக்கப்பட்ட ஜீ 56 ரக மூன்று துப்பாக்கிகளும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. (ரா)

## கூட்டணியினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து இன்று சென்னைக்கு செல்வார்களென்றும், அங்கு தமிழர் பிரதேச நிருவாக அமைப்புக்குறித்து இறுதி முடிவு எடுப்பார்களென்றும் கூறப்பட்டது. (ரா)

## வடக்கு, கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களும் முன்வந்துளன என்றும் கூறினர்.

“உணவுப் பொருட்கள், மருந்துவகைகள் போன்றவற்றையும் இந்த நிறுவனங்கள் வழங்க உள்ளன. ஜப்பானிய நிறுவனமொன்று மீன்பிடித்துறைமுகங்களை திருத்துவதற்கும் புதிய மீன்பிடித்துறைமுகம் ஒன்றை நிறுவுவதற்கும் முன்வந்துள்ளது. இந்நிதிகள்மூலம காங்கேசன் துறையிலுள்ள பௌத்த விகாரையும் புனரமைப்புச் செய்யப்படும்’’ என்று அமைச்சர் தெரிவித்தார். (ஒ)

## கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்தில் 63 வருடங்களாக இயங்கி வந்து கடந்த சில ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த 'தமிழ்ச் சங்கம்' அண்மையில் மீளமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் இயங்கிவருகிறது.

இச் சங்கம் சட்ட, மருத்துவ, கலைப்பீட மாணவர்களின் ஆர்வத்தினைப் பூர்த்தி செய்யவும், திறனை வெளிக்கொணரவும் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலங்களிலும் இச்சங்கம் கலை, இலக்கிய, சமூகவியல் துறைகளின் வளர்ச்சியில் தன் பங்களிப்பை முழு அளவில் செலுத்தி வந்தது.

தற்போது சங்கத்தின்போஷகராக பேராசிரியர் ஜி. எல். பீரிசும், பெரும் பொருளாளராக விரிவுரையாளர் வி ரி தமிழ்மாறனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஏனைய சங்க நிர்வாகிகள்; தலைவர்: ஜனாப் செ. மு. முகம்மது யாஸின், துணைத்தலைவர்: திரு.ஏ சந்திரசேகரம், இணைச் செயலாளர்கள்: திரு நா ஞானப்பிரகாசம், திரு செ. செல்வரட்ணம், இளம் பொருளாளர்: ஜனாப் கா. செய்யது இப்ருஹிம், இதழாசிரியர்: திரு அ. சர்வேஸ்வரன், உதவி இதழாசிரியர்: செல்வி. க மாலதி.

செயற்குழு உறுப்பினர்களாக 6 பேர் கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (சி)

## மாவைக்கந்தன் கும்பாபிஷேகம்

[மாவிட்டபுரம்]

கடந்த எண்பத்தொரு தினங்களாக நித்திய நைமித்திய பூசைகள் தடைபட்டிருந்த மாவைக்கந்தன் ஆலய சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் இம்மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தன்று பிற்பகல் 4-00 மணியளவில் சாயங்கால பூசைகளின் பின்னர் பூத்தண்டிகையில் சுவாமி வீதிவலம் வருதல் நிகழும். [ஓ]

## இப்படியும் நடக்கிறது

வடக்கு, கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களைப் பெரிய அளவில் ஆரம்பித்து, பொருளாதாரத்தைக் சட்டி எழுப்ப அரசு இப்பொழுது தீவிரமாகச் சிந்திக்கிறது.

இதில் விஷயம் என்னவென்றால்; எப்படியான திட்டங்களை எங்கு ஆரம்பிக்கலாம் என்பதை அறிந்து திட்டம் வரைய ஓர் 'மூளையை' அரசு நாடியுள்ளது.

அந்த 'மூளை' ஒரு தமிழர் 'மூளை' தான்.

அதாவது, வடக்கைச் சேர்ந்த ஒரு [முன்னாள்] எம். பி!

அதாவது.........இதற்குமேல் எழுதினால் உங்கள் மூளைக்கு வேலை இல்லாமல் போய்விடும் கொஞ்சம் சிந்தியுங்களேன்!

ஊடுருவி


# ஏன் ஸ்ரான்டேர்ட் பினான்ஸில் முதலீடுசெய்ய வேண்டும்?



'தொடர்ச்சியான சிறந்த வட்டி வீதங்கள்'



'கால் நூற்றாண்டுக்கும் மேலாக அவர்களால் நிரூபிக்கப்பட்ட நம்பிக்கையான சேவை'



'வைப்பு ஆதாரத்தில் 40%க்கும் மேற்பட்ட தொகைக்கு நிறைகாப்பு.'



'குறைந்தபட்ச வைப்புத் தொகை ரூ.1000/- மட்டுமே அத்துடன் மிகச் சிறிய முதலீட்டாளர்களுக்கும் மிகக் கண்ணியமான சேவை'



'எனது முதலீடுகளுக்குப் பாதுகாப்பும் எனக்கு உறுதியான வருமானமும்'

1987ம் ஆண்டுக்கான வட்டி விகிதம்

| வைப்புக்கள் | 3 ஆண்டுகள் | | 2 ஆண்டுகள் | | 1 ஆண்டு | | 6 மாதங்கள் | 3 மாதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | முதிர்ச்சியில் |
| ரூ:200,000உம் அதற்கு மேலும் | 25% | 19% | 23% | 19% | 17% | 15% | 15% | 14% |
| ரூ:100,000உம் ரூ:200,000க்கு குறையவும் | 23% | 19% | 20% | 17% | 17% | 15% | 15% | 14% |
| ரூ 1,000 உம் அதற்கு மேலும் | 22% | 18% | 19% | 16% | 17% | 15% | 15% | 14% |

நிதி நிலைமைத் தகவல்கள்

| | 1985/86 ரூபா | 1984/85 ரூபா | 1983/84 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | 1,700,000 | 1,700,000 | 1,700,000 |
| மூலதன ஒதுக்கீடு | 14,926,300 | 9,944,500 | 9,944,500 |
| வருவாய் ஒதுக்கீடு | 4,326,547 | 1,452,653 | 1,200,764 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 20,952,847 | 13,097,153 | 12,845,264 |
| சேமிப்புகள் | 139,700,253 | 123,346,021 | 90,507,406 |
| கடன்கள் | 471,077 | 1,484,621 | 3,211,633 |
| சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கு முன் கிடைத்த லாபம் | 28,940,000 | 24,658,633 | 23,101,7[illegible]3 |
| சேமிப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 26,066,107 | 23,306,744 | 20,060,740 |
| வரிவிதிக்குமுன் கிடைத்த நிகர லாபம் | 2,873,894 | 1,351,888 | 3,041,023 |
| வரிவிதித்தபின் கிடைத்த நிகரலாபம் | 2,873,894 | 1,351,888 | 3,041,023 |
| ஆதாய பங்குவீதம் | — | 1,100,000 | 2,295,000 |
| | — | 65% | 135% |

இயக்குநர்கள்:
எச் எல்.ஈ குரே – தலைவர்
மா சட்டத்தரணி (இன்னர் டெம்பபள) சட்டத்தரணி
F B I. M. (Eng) A C I (Lond.)
எம் வி தியாகராஜா, உப தலைவர்
F C M A F C I A A F B I M
பி ஞானசேகரம். செயலாட்சி இயக்குநர்
ஜே சி. ஆர் குரே
F C M. A M B I M
பிரசன்ன எவ குணவர்தன
J P U M A C I (Lond) A I Arb (Lond)
சட்டத்தரணி சட்ட ஆலோசகர் நொத்தாரிசு

பிரதான தொழில்கள்
தவணைக் கொள்வனவுக்கு நிதியளித்தல் குத்தகை மற்றும் கடன் நிதியளித்தல் வைப்புகளைச் சேகரித்தல் அடைமானக் கடன். இறக்குமதிக்கு நிதியளித்தல்

## இன்றே நீங்களும் ஸ்ரான்டேர்ட் பினான்ஸில் முதலீடுசெய்ய வேண்டாமா?

Minds/SF/30

நம்பிக்கையோடு முதலீடு செய்யுங்கள்

SFL ESTD.1959

**ஸ்ரான்டேர்ட் பினான்ஸ் லிமிட்டெட்**

த. பெ. இல. 1644, 481, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 தொலை பேசி: 597111, 598411

1959 டிசம்பர் 31ல் கூட்டிணைக்கப்பட்டது.

1979ம் ஆண்டின் 27ம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்திற்கு அமையப் பதிவு செய்யப்பட்டது. அடைமான அதிகாரச்சட்டம், நம்பிக்கைப் பற்றுச்சீட்டுகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றிற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையம்.

கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில்
PROCESSING & PRINTING
நவீனமுறையில் செய்து தருபவர்கள்.

**கொழும்பு ஸ்ரூடியோ**
**55, யணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனம். ஏ2084


## நன்றி

கொடூரமான வியாதியினின்று காப்பாற்றினதற்காக தடேயுஸ் தேசத்தின் புனித யூதா தேயுவுக்கு அன்பும், நன்றியும், வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்தன்
பண்டத்தரிப்பு.
[சி-0592]

## தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் (1987)

**யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.**
**யா/சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை.**

மேற்படி எமது பாடசாலைகளில் 1987ம் ஆண்டிற்கான பயிற்சி நெறிகள் தொடங்க உள்ளதால், பயிற்சி பெற விண்ணப்பித்த மாணவ மாணவிகள் எதிர்வரும் 29-08-87 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பாடசாலைக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம். புதிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அதிபர்கள்.**

[சி-0588]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





மழலைகள்

| | |
|---|---|
| ஜெ. கிறிஸ்ரா | ஜெ. கரோலினா |
| ஜெயதர்ஷினி | ஜெபதினி |
| பிறப்பு: 19-11-84 | பிறப்பு: 23-10-85 |
| இறப்பு: 24-08-86 | இறப்பு: 13-08-86 |

நிறைவான செல்வமென நினைத்திருந்தோம்
சிறைபட்ட பறவை போல சிக்க வைத்து
கறையான உலகமிதை களைந்து விட்டு
முறையான முழுவாழ்வுக்காய் முன் பின்னாய்
இறைவனின் பாதம் இருவரும் இணைந்தீரோ
இறையடியில் இருவரும் இளைப்பாற இறைஞ்சுகிறோம்

சீர் கொண்டு வாழ்வீரென சிந்தித்தோம்
பார் ஆண்டு வாழ்வீரென பார்த்திருந்தோம்
யார் கொண்டு சென்றது எமைப் பிரித்து
ஓர் ஆண்டு ஓடி மறைந்தது—ஆனால்
நூறாண்டு சென்றாலும் நும் நினைவு மறையாது

வ ஜெயராஜன்,
"மத்தேயுமனை"
மல்லாகம்.

இப்படிக்கு
அப்பா, அம்மா, குடும்பத்தார்,
சுற்றத்தார்.

(ராஜன்) [ஏ-2094]

# LANKA CEMENT LIMITED

## KANKESANTHURAI.

பொதிநிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT) துறைமுகத்திற்குக் (HARBOUR) சீமெந்து கொண்டுசெல்லுதல், லொறியிலிருந்து இறக்குதல்க, ப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகியவற்றிற்கான

## கேள்விப் பத்திரம் (TENDER)

TENDER No. LCL/H/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது சீமெந்துத் தொழிற்சாலையின் பொதிநிரப்பும் பகுதியிலிருந்து (Packing Plant) துறைமுகத்திற்குக் (Harbour) சீமெந்து கொண்டு செல்லுதல், லொறியிலிருந்து இறக்குதல், கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகியவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் (Tenders) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் (Tender Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலைநாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 29-08-87 சனிக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப்பெறமுடியாத வைப்புப்பணமாக ரூபா 50/-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 03-09-87 மாலை 4-00 மணிவரை விநியோகிக்கப்படும்.


கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 04-09-87 முற்பகல் 10 00மணிக்கு கேள்விப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

**பிரதிப் பொதுமுகாமையாளர்,**

**லங்கா சீமெந்து லிமிட்டெட்,**
**காங்கேசன்துறை.**

[சி-2095]

## ஓராண்டு நினைவஞ்சலி





| | |
|---|---|
| அமரர் ஜேக்கப் | யோசப்பின் சேசம்மாள் |
| தத்துவசிங்கம் பீரிஸ் | பீரிஸ் |
| தாயின் மடியில் | தாயின் மடியில் |
| 08-01-1938 | 04-04-1956 |

ஆண்டவன் அடியில்: 24-08-86
நினைவு தினம்: 25-8-1987

பிறப்பவர் அனைவரும் இறப்பது தெய்வசித்தம். ஆனால் உங்களின் மரணம், எங்களால் மறக்க முடியுமா? அங்கும் இங்குமாக எங்களையெல்லாம் தாலாட்டிச், சீராட்டி அன்புமொழி பேசிய நீங்கள் இருவரும் மறைந்து ஓராண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் நாட்கள் நகரலாம். நீங்கள் இருவரும் விட்டுச் சென்ற தெய்வீக முகம் எங்கள் மனத்தில் நிழலாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக

இவர்களின் ஆத்ம இளைப்பாற்றுக்காக நாளை (25-08-87) செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்கு புனித கொஞ்சேஞ்சிமாதா பேராலயத்தில் விசேட பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரும் ஆத்ம இளைப்பாற்றுக்காக பிராத்திக்குமாறு வேண்டுகிறோம்.

—தாய் மனைவி, மக்கள், சகோதரர்,
சகோதரிகள், நண்பர்கள்.

[சி- 0589]

விளம்பரம்: இல. 9

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் கேள்வி அறிவித்தல் - 1987

கீழே குறிப்பிடப்படும் சந்தைகளுக்கு/இறைச்சிக்கடைகளுக்கு 31.12.87ம் திகதி வரைக்கும் சந்தைக் கடைகள் தொடர்ச்சியாக வாடகைக்கு விடுவதற்கும் அரக்கு முத்திரை வைத்த கேள்விகள் 4.9.87ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். தேவையான விபரங்களையும் கேள்விப்பத்திரங்களையும் அந்தந்த உப அலுவலகங்களில் 2-9-87ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை செயலாளருக்கும் இணைப்பிரதி சம்பந்தப்பட்ட உப அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| | உப அலுவலகத்தின் பெயர். | குத்தகையின் தன்மை | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | கிளிநொச்சி | கிளிநொச்சிக் சந்தை 31-12-87ம் திகதிவரை | 30,000/- |
| 2. | கிளிநொச்சி | 1. மாட்டிறைச்சிக் கடை இல. 1 | — |
| | | 2. ,, இல. 2 | — |
| | | 3. பரந்தன் சந்தை மா. இல. .1 | — |
| | | 4. ,, ,, இல .2 | — |
| | | | மதிப்பிடப்பட்ட ஒரே முறையில்செலுத்தும் தொகை ஒவ்வோர் கடைக்கும் |
| 3. | சுன்னாகம் | சுன்னாகம் மத்திய சந்தை சி. ப. மேல்மாடி | ரூ. 70,000/- |
| 4. | சுழிபுரம் | 1. புதியகடை மு. பக்க இல. .1 | ரூ. 65.000/- |
| | | 2. ,, பி. பக்க இல. .5 | ரூ. 45,000/- |
| 5. | ஊர்காவற்றுறை | ஊர்காவற்றுறை மேல்மாடி கடைகள் எட்டு ஒவ்வொன்றிற் | ரூ. 12,000/- |
| 6. | காங்கேசன்துறை | சந்தைக்கடை 2 ஒவ்வொன்றும் | ரூ. 2,000/- |
| 7. | நெல்லியடி | இராஜகிராம கடை 1 | ரூ. 500/- |
| 8. | கைதடி | கைதடி சந்தைக்கடை 2 | ரூ. 40 000/- |
| 9. | நாரந்தனை | புளியங்கூடல் சந்திக்கடை 3 | ரூ. 25.000/- |
| 10. | மானிப்பாய் பட்டின | மத்தியசந்தை உ புறக்கடை 7 | ரூ. 25,000/- |
| 11. | நயினாதீவு/புங்குடுதீவு | நயினாதீவு குறிகட்டுவான் பயணப்படகு சேவை 31.12 87 வரை | ரூ. 2,000/- |

வை. மு. பஞ்சலிங்கம்
செயலாளர்,
யாழ்ப்பாண அபிவிருத்திச்சபை.

அபிவிருத்திச் சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம். [எ 2079]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 24 8-87

இந்திய வம்சாவளியினர் நாடற்றவர் பிரச்னையைத் தீர்க்க

# இந்திய அரசின் உதவியை இ. தொ. க. நாடியுள்ளது!

(கொழுபபு)

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளிப் பிரஜைகள் குறித்த பிரச்னையைத் தீர்க்கும் வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்தியஅரசின் உதவியை நாடியுள்ளது

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் நாடற்றவர் பிரனைகள் சம்பந்தமாகவே இந்திய மத்திய அரசின் உதவியை இ. தொ. கா. நாடியுள்ளதுடன் இதுகுறித்து அண்மையில் இலங்கைக்கு பிரதமர் ராஜீவ் காந்தியுடன் வந்திருந்த இந்திய உயர்மட்டக்குழுவுடனும் இ தொ கா. பேச்சுக்களை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

கிராமிய தொழில்துறை அமைச்சர்எஸ் தொண்டமான் இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் கே. நட்வார்சிங் ஆகியோரே இப்பேச்சுக்களை மேற்கொண்ட முக்கிய இந்திய இலங்கைப் பிரமுகர்களாவர்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் தொடர்பாக 1964ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் 5 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு இந்திய அரசாங்கமும், 3 லட்சம் பேருக்கு இலங்கை அரசாங்கமும் தத்தமது நாடுகளில் பிரஜாவுரிமைகளை வழங்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது

ஆனல் இந்த ஒப்பந்த அமுலாக்கங்கள் தாமதமாகவே இருந்து வருகின்றன. இது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

1974ம் ஆண்டு இந்த பிரஜாவுரிமைத் தொகையை இருதரப்பினரும் மேலும் 75 ஆயிரமாக அதிகரிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் இந்த பிரஜாவுரிமை விவகாரம் தொடர்ந்து சீரற்றதாகவும் விரைவற்றதாகவுமே காணப்படுகிறது.

இதனையடுத்தே இப்பிரச்னையைவிரைவாகவும் தாமதமின்றியும் தீர்த்துவைக்கும் வகையில் இந்திய உதவி இ. தொ. காவினுல் நாடப்பட்டுள்ளது.

இந்தியமத்திய அரசும் தனது ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது.

## நாவற்குழி முகாம் வீதி இரவில் மூடப்படும்

[யாழ்ப்பாணம்]

பொதுமக்களின் பயணத்திற்காக அதிகாலை ஐந்து முப்பது மணிக்கு திறந்து விடப்படும் நாவற்குழி முகாம்வீதி, மாலை ஆறு முப்பது மணிக்கு மூடப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் நன்மை கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இரவு நேரங்களில் இவ்வீதியில் பொதுமக்கள் பயணப்மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் இம் முகாமிலுள்ள இராணுவ சிப்பாய் ஒருவர் தெரிவித்தார். [ஒ]

## புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள்அனைத்தும் நாளை செவ்வாய்க்கிழமை மூன்றும் தவணைக்கு ஆரம்பமாகும் என்று கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் அ.செ.நல்லையா அறிவித்துள்ளார்.

## வடமராட்சி பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளை மூன்றும் தவணைக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பிப்பதெனக் கோட்டக் கல்வியதிகாரியினுல் நடத்தப்பட்ட அதிபர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் வடமராட்சிப் பகுதியில் வன்செயல்களினுல் பாரிய சேதமடைந்த பாடசாலைகளும் தற்பொழுதுக.பொ த (உயர்) தரப் பரீட்சை நிலையங்களாக இயங்கும் பாடசாலைகள் 24ம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 10 அந்தர் தந்திக் கம்பிகள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். தபால்கந்தோரில் கொள்ளையடிக்கப்பட்ட சுமார் பத்து அந்தர் தந்திக்கம்பிகளை யாழ். வர்த்தகர் சங்கத்தினர் மீட்டனர்

கொள்ளையடிக்கப்பட்ட இக் கம்பிகளை கார் ஒன்றில் சிலர் எடுத்துவந்தபோது சத்திரத்து சந்தியில் வர்த்தகர் சங்கத்தினர் வழிமறித்து கம்பிகளை மீட்டனர்.

அவ்விடத்தில்கூடிய பொதுமக்களு வர்த்தக சங்கத்தினருடன் சேர்ந்து கம்பிகளை எடுத்துச் சென்றவர்களை எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

இக்கம்பிகள் தொலைதொடர்பு நிலைய உத்தியோகத்தர் குருமூர்த்தியிடம் ஒப்படைக்கப்பட்டதாக சங்கச் செயலாளர் தெரிவித்தார். [க]

## நோர்வே செஞ்சிலுவை சங்கத்திற்கு மகஜர்!

[யாழ்ப்பாணம்]

ராணுவ நடவடிக்கைகளினுலும் பொருளாதார தடைகளினுலும் யாழ் குடாநாட்டில் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, வியாபாரம், போக்குவரத்து, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வீடமைப்பு ஆகிய துறைகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. பந்துலு அபயசேகரா ஊடாக நோர்வே செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் நாயகம் திரு. ஒட்ஹிருனிடம் யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு ஆர்.பாலசுப்பிரமணியம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவரின் அறிக்கையை பெற்றுக்கொண்டபின் திரு ஒட்ஹிருன் கருத்துத்தெரிவிக்கையில் இவ்வறிக்கை ஜெனிவாவிலுள்ள செஞ்சிலுவைச் சங்க கூட்டுக் குழுவுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும் ராணுவ நடவடிக்கைகளாலும் பொருளாதாரத் தடைகளினுலும் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டு மக்களுக்கு நோர்வே செஞ்சிலுவைச்சங்கம் உதவிசெய்வதற்கு முடிவெடுத்துள்ளதாகவும்தெரிவித்த திரு ஒட்ஹிருன் 450 புடவை பொதிகளை யாழ். செஞ்லுவைச் சங்கத் தலைவரிடம் கையளித்தார்.

## குரும்பசிட்டிப் பகுதியில் ஆலய புனர்நிர்மானத்திற்கு ஒன்றரை கோடி ரூபா தேவை

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டிப்பகுதியில்மினி முகாம் அமைத்த ஸ்ரீலங்கா ராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட இரண்டு ஆலயங்களையும் புனர்நிர்மானம் செய்ய ஒருகோடியே ஐம்பதுலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா தேவையென மதிடபீடு செய்யப்பட்டுள்ளது.

குரும்பசிட்டி பிரஜைகள் குழுவினரால் மதிப்பீடுசெய்யப்பட்ட மகஜர் ஒன்று பிரதேச அபிவிருத்தி, இந்துகலாசார அலுவல்கள் அமைச்சர் திரு செ. இராசதுரைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குரும்பசிட்டி அம்மன் கோவில் கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டதுடன், புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரமும், சித்திரத் தேர் அகியனவும் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

குரும்பசிட்டிப் பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலயமும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளது. [வா]

## நாவற்குழி ஊடாக சேவை

(ஓட்டுசுட்டான்)

நாவற்குழி ஊடாக யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துச் சேவை நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பமானது.

பாராளுமன்ற சம்பவம்:

## சேனுதீர மரணமானூர்

[கொழும்பு]

பாராளுமன்ற தாக்குதல் சம்பவத்தின்போது குண்டு வீச்சில் காயமடைந்த கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த திரு. நோபல் சேனுதீர நேற்று காலமானுர்.

## தமிழ் வர்த்தகர்களுக்கு புதிய கடைகள்

(நுவரெலியா நிருபர்)

அட்டன் பஸ்நிலையத்தருகே புதிதாக 32 கடைகள் அமைக்கப்பட்டு தமிழ் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருட முற்பகுதியில் மலையகத்தில் இடம்பெற்ற வன்செயல்களின்போது ஹற்றன் பொதுச் சந்தையில் தமிழர்களுக்குச் சொந்தமான 32 கடைகள் முற்றும் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

## ஈழ. தே. ஐ. வி. முன்னணி இன்று பிரசாரக்கூட்டம்

(கிளிநொச்சி)

ஈழம்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் பிரசாரப் பொதுக்கூட்டம் இன்று மாலை கிளிநொச்சி நகர கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது

திரு தெய்வேந்திரம் ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதுடில்லியில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் இந்தியஅரசு தந்த வாக்குறுதிகள், கடந்த கால நடவடிககைகள், எதிர் காலதிட்டங்கள் என்பனபற்றி ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னனி (ஈ. என். டி. எல். எவ்.) தலைவர்கள் விளக்கமளிப்பார்கள்.

இக்கூட்டத்தில் ரெலோ இயக்கத்தலைவர் செல்வம் உட்பட ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம், புளட் ஆகிய இயக்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் புனரமைப்புக்கு உதவி

[கொழும்பு]

இலங்கையில் புனரமைப்புக்கு உதவ ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் முன்வந்துள்ளன.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் தூதர், பதல் வெளிவிவகார அமைச்சர் திரு. டிரோன் பெர்ணுண் டாவைச் சந்தித்து இவ்வுதவிபற்றித் தெரிவித்துள்ளார். [சி]

## மரண அறிவித்தல்

### திருமதி சிவலோகேஸ்வரி சிவதாசன்

(சின்னபபா)

உரும்பிராயைச் சேர்ந்த திருமதி சிவலோகேஸ்வரி சிவதாசன் 22-08-87 இல் சிவபதமெய்தினுர் இளர்சண்டிலிப்பாயைச் சேர்ந்த தில்லைநாதன் சிவதாசனின் (உப முகாமையாளர், இலங்கை வங்கி, 2ம் கிளை யாழ்ப்பாணம்) அருமை மனைவியும், கோகிலா [உடுவில் மகளிர் கல்லூரி 9-ம் ஆண்டு மாணவி)வின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற திரு. மதியாபரணம், திருமதி பாக்கியம் மதியாபரணம் ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்ற திரு. தில்லைநாதன், திருமதி தில்லைநாதன் ஆகியோரின் மருமகளும், திருமதி ஜெ நடராஜா (ஆசிரியை, ம. ம வித்தியாலயம், வசாவிளான்), திரு. பாலசுப்பிரமணியம் (முகாமையாளர், பார்க் வியூ லாட்ஜ்,கொழும்பு), திருமதி க விவேகானந்தன் (முன்னுள் மருந்தாளர், யாழ். ஆஸ்பத்திரி) ஆகியோரின் சகோதரியும், திரு இ. நடராஜா (நிறைவேற்றுப் பொறியியலாளர், மதவாச்சி), திருமதி தேவி பாலசுப்பிரமணியம், திரு கு. விவேகானந்தன் (கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்), திரு ச சிறிரங்கநாதன் (முன்னுள் தொழிலதிபர், தாசன் & கோ), திருமதி க. சிறிரங்கநாதன் (இளைப்பாறிய ஆசிரியை), திரு தி. சிவநேசன், திருமதி ப சிவநேசன், திருமதி ஜெ கிருஷ்ணசாமி (அதிபர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும், சாலினி யாழ்.மருத்துவபீடம் 3ம் ஆண்டு), பாலமுகுந்தன் (சென். ஜோசெப்ஸ், கொழும்பு), பாலராஜினி (சென் பிறிஜெட்ஸ், கொழும்பு), அரவிந்தன் (லண்டன்), மயூரன் (யாழ். இந்துக் கல்லூரி), வைதேகி (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் இனிய மாமியும் ஆவார். ஈமக் கிரியைகள் அன்னரின் இல்லத்தில் ('பிரசாந்தி', கோப்பாய்வீதி உரும்பிராய்) 24-08-87 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு பிற்பகல் 4-00மணிக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திரு. தி. சிவதாசன்.

சி-0593

## மரண அறிவித்தல்

### விஸ்வநாத ஐயர் அர்த்தநாரீஸ்வரி

தொல்லிப்பழை கிழக்கு கேணியடியைச்சேர்ந்த சங்கீத ஆசிரியர் பிரமஸ்ரீ R. விஸ்வநாத ஐயரின் அன்பு மனைவி வி. அர்த்தநாரீஸ்வரி அம்மா 22-08 87 சனிக்கிழமையன்று காலமானுர். அன்னுர் பிரம்மஸ்ரீ வி. சோமசுந்தர ஐயர் [நாராயண சர்மா], கோகிலாம்பாள், வனஜாமபாள், சாரதாம்பாள், ஜம்புநாதன் ஆகியோரின் அன்புத்தாயார் ஆவார். இறுதிக் கிரியை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வி. நாராயணசர்மா.

சி-0596

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B/10036/81. P O. Box: 49. Telegram: Eelanadu. Telephone: 22389, 24126.